தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### காற்றழுத்தத் தாழ்வு பகுதி:கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி காரணமாக கடலோர மாவட்டங்களின் சில பகுதிகளில் வெள்ளிக்கிழமை (ஜனவரி 3) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலின் தென்கிழக்கு பகுதியில் அண்மையில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது வியாழக்கிழமை வலுவடைந்து காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறியுள்ளது. வரும் நாள்களில் அது மேலும் வலுவடைந்து தமிழகத்தை நோக்கி நகர்ந்து வரும்பட்சத்தில் மாநிலத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தின் சில கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும். சென்னையைப் பொருத்த வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகாலையில் பனிப் பொழிவு இருக்கும். நீலகிரி மாவட்டத்தில் அடுத்த இருநாள்களுக்கு இரவில் உறைபனி இருக்கும்.

### வேளாண் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி அமைச்சகத்தின் நிதி உதவியோடு உணவு மற்றும் தங்கும் வசதியுடன் இப்பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது. 18 வயது முதல் 35 வயதுடைய, குறைந்தபட்சம் வேளாண்மையில் பட்டயப்படிப்பு முடித்தவர்கள் பங்கேற்கலாம். வேளாண் பட்டப்படிப்பு மற்றும் அறிவியல் சார்ந்த பாடங்களில் பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டம் முடித்தவர்களும் பங்கு பெறலாம். இப்பயிற்சி முடித்தபின், பயனாளிகள் தொழில் துவங்குவதற்கான

சிறந்த திட்டவரைவு வைத்திருந்தால், அவர்கள் மாவட்ட தொழில் மையம் மற்றும் வங்கிகள் மூலம் நிதி உதவிபெற பரிந்துரைக்கப்படுவர்.

விதை உற்பத்தி, பூச்செடிகள், மரக்கன்றுகள் வளர்ப்பு, உயிர் உரங்கள் உற்பத்தி, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு, உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டும் தொழில்நுட்பங்கள், நுண்ணிய பாசனம் மற்றும் பசுமை குடில் தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல், நிதி மேலாண்மை, திட்ட அறிக்கை தயாரித்தல பற்றிய பாடங்களும் செயல்முறை விளக்கங்களும் அளிக்கப்படும்.

விருப்பமும் ஆர்வமும் உள்ள தகுதியுடையவர்கள், தங்களது பெயரை முதல்வர், விவசாயக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை என்ற முகவரியில், தொலைபேசி எண்.(0452)2422956 என்ற எண்ணிலோ அல்லது அலைபேசியில் 8754213353 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு பயிற்சி துவங்குவதற்கு முன்தகவல் தெரிவிக்கப்படும், என மதுரை விவசாயக்கல்லூரி முதல்வர் சி.சின்னுசாமி தெரிவித்துள்ளார்.

## வேளாண் பல்கலை. பேராசிரியருக்கு ஜப்பான் பல்கலைக்கழகத்தில் சிறப்பு பதவி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியருக்கு ஜப்பான் டோக்கியோ பல்கலைக்கழகம் சிறப்பு பதவி வழங்கியுள்ளது.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தாவர மூலக்கூறுவியல் மைய இயக்குனராகப் பொறுப்பு வகிப்பவர் ர.சந்திரபாபு. நெல் மூலக்கூறுவியலில் இவரின் பங்களிப்பைப் பாராட்டும் வகையில் "நியமனப் பேராசிரியர்' என்ற உயர் பதவியை டோக்கியோ பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.

ஆசிய இயற்கைச் சூழல் அறிவியல் மையத்தில் மூன்று ஆண்டுகள் பணிபுரிவதற்காக இந்தக் கௌரவப் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இப் பதவிக் காலத்தில் இளம் விஞ்ஞானிகளுக்கு அறிவியல் பூர்வமான ஆதரவு

வழங்குதல், டோக்கியோ பல்கலைக்கழகத்தில் பன்னாட்டு மாணவர்கள் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு துணைபுரிதல் ஆகிய பணிகளை இவர் மேற்கொள்ள உள்ளார்.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக பேராசிரியர் ர.சந்திரபாபு, உலகின் முன்னணி நெல் ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய நெல் ரகங்களை உருவாக்கும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 53.06 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 53.06 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 123 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,150 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 5.21 டி.எம்.சி. ஆகும்.

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 5-வது மாவட்ட மாநாடு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 5 வது மாவட்ட மாநாடு போளூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாநாட்டுக்கு மாவட்டத் தலைவர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் திருஞானசம்பந்தம், மாவட்ட நிர்வாகிகள் சுப்பிரமணியன், வீரபத்திரன், துரைசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வட்டப் பொருளாளர் நாராயணசாமி வரவேற்றார். வட்டத் துணைத்தலைவர் சுப்பிரமணியன் மாநாட்டு கொடியேற்றினார். வட்டக்குழு ருத்ராச்சாரி, வட்டச் செயலாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் தியாகிகளுக்கு அஞ்சலி புகழாரம் சூட்டினர்.

மாநாட்டில் மாநில துணைத்தலைவர் துளசிமணி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் முல்லை, மாவட்டச் செயலாளர் மாதேஸ்வரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாவட்டச் செயலாளர் ராஜேந்திரன் செயலறிக்கையை வாசித்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும், வேளாண் விளைபொருள்களுக்கு லாபகரமான விலை வழங்க வேண்டும், மரபணு மாற்று விதைகளை தடுக்க வேண்டும், போளூர் தாலுகாவில் விவசாயக் கல்லூரி அமைத்திட வேண்டும், பன்னாட்டு நிறுவனங்கள் விவசாயத்தை கையகப்படுத்துவதை தடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டன.

வட்டத் தலைவர் சண்முகம் மற்றும் செங்கம், கலசப்பாக்கம், செய்யாறு ஆகிய பகுதிகளின் தமிழ்நாடு விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## போச்சம்பள்ளி பகுதியில் தேங்காய் பட்டை வரத்து குறைந்ததால் நார் தொழில்சாலைகள் முடக்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட தேங்காய் நார் தயாரிக்கும் தொழில்சாலைகள் இயங்கி வருகின்றன.

கடந்த ஆண்டு கடும் வறட்சி ஏற்பட்டதால், போச்சம்பள்ளி பகுதியில் தென்னை மரங்கள் காய்ந்து போயின. இதனால், பல ஆயிரம் மரங்கள் செங்கல் சூளைகளுக்கு விறகாக விற்பனை செய்யப்பட்டன. மேலும், வறட்சி, எரிபூச்சித் தாக்குதலால் தேங்காய் விளைச்சல் குறைந்தன. கடந்த ஆண்டு ஒரு தேங்காய் ரூ.4க்கு விற்பனை ஆனது. ஆனால், இந்த ஆண்டு தேங்காய் வரத்து குறைந்ததால், ஒரு தேங்காய் ரூ.10க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தேங்காய் வியாபாரிகளே அதிக அளவில் நார் தொழில் சாலைகள் வைத்துள்ளனர். இவர்கள், தேங்காயை கொள்முதல் செய்து அவற்றை உரித்து தேங்காய் பருப்பை ஆந்திரம், கர்நாடகம், தில்லி, சென்னை போன்ற இடங்களுக்கு விற்பனைச் செய்துவிடுவர். தேங்காய் பட்டையை நார் தொழில்சாலைகளுக்கு விற்றுவிடுவர்.

கடந்த ஆண்டு ஒரு தேங்காய் பட்டை 10 பைசாவுக்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு 70 பைசாவுக்கு விற்கப்படுகிறது. ஆனாலும், நார் தயாரிப்பதற்காக

போதிய அளவில் தேங்காய் பட்டை கிடைப்பது இல்லை என கூறப்படுகிறது.

நார் உற்பத்தி செய்யும் தொழில்சாலைகளுக்கு ஒரு நாளைக்கு சுமார் 50 ஆயிரம் பட்டைகள் தேவைப்படுகிறது. ஒரு லோடு லாரியில் 10 ஆயிரம் பட்டைகளை மட்டுமே ஏற்ற முடியும். இதனால், ஒரு நாளைக்கு தொழில்சாலைகளுக்கு 5 லோடு பட்டைகள் தேவைப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் ஒரு நாளைக்கு அதிகபட்சம் 10 லோடு வரை தேங்காய் பட்டைகள் கிடைத்தன.

ஆனால், தற்போது ஒரு வாரத்துக்குக்கூட 5 லோடு தேங்காய் பட்டைகள் கிடைப்பதில்லை.

இதனால், தினசரி தொழில்சாலையை இயக்கமுடிவதில்லை, மாறாக வாரத்துக்கு ஓரிரு நாள்கள் மட்டுமே தொழில் சாலைகளை இயக்க முடிகிறது. மேலும், சிறிய தொழில்சாலைகள் இரண்டு வாரங்களுக்கு ஒரு நாள் மட்டுமே இயங்கி வருகின்றன.

இதனால், தொழில்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலையின்மையால் பாதிக்கப்படுகின்றனர். இந்த ஆண்டில் நல்ல மழை பெய்தால் மட்டுமே தேங்காய் பட்டைகள் வரத்து அதிக அளவில் இருக்கும் என்று நார் தொழில் சாலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

**தனியார் நெல் அறுவடை இயந்திரங்கள் வாடகையை முறைப்படுத்தக் கோரிக்கை**

டெல்டா மாவட்டங்களில் தன்னிச்சையாக உயர்த்தப்பட்டுள்ள தனியார் நெல் அறுவடை இயந்திரங்களின் வாடகை உயர்வை வேளாண் துறை உடனடியாக முறைப்படுத்த வேண்டுமென விவசாய சங்கங்களின் கூட்டமைப்புப் பொதுச் செயலர் ஆறுபாதி ப. கல்யாணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர், தமிழக வேளாண் துறை செயலாளர், வேளாண் துறை ஆணையர் மற்றும் டெல்டா மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பிய கோரிக்கை மனுவின் விவரம்:

தமிழக காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது சம்பா நெல் அறுவடைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு கடும் வறட்சியை எதிர்கொண்டு

பாதிக்கப்பட்ட சம்பா நெல் பயிர்கள், நிகழாண்டிலும் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டு விளைந்துள்ளன.

நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட நெல் பயிர்களில் மஞ்சள் நோய், குலைநோய் மற்றும் சூறை நோய் பாதிப்புகள் ஏற்பட்டு, மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கமாகக் கிடைக்க வேண்டிய மகசூல் அளவில், 3-ல் 1 பங்கு மட்டுமே நிகழாண்டில் விளைச்சல் கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்க நேரிட்டுள்ளது.

இதைத் தவிர, கடைமடை பகுதிகளில் ஏற்பட்ட தண்ணீர் தட்டுப்பாடு காரணமாகவும், சம்பா நெல் பயிர் சாகுபடி பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது.

அரசு வேளாண் பொறியியல் துறை அறுவடை இயந்திரங்களின் வாடகை, பெல்ட் டைப் இயந்திரத்துக்கு மணிக்கு ரூ 1,530 எனவும், டயர் இயந்திரத்துக்கு ரூ. 910 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், தனியார் பெல்ட் அறுவடை இயந்திரங்களுக்கு ரூ. 2 ஆயிரம் முதல் ரூ. 2,500 வரையிலும், டயர் இயந்திரங்களுக்கு ரூ. 1, 400 முதல் ரூ. 1,800 வரையிலும் அதிகப்படியான வாடகை வசூலிக்கப்படுகிறது.

நாகை, திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய 3 மாவட்டங்களிலும் வேளாண் பொறியியல் துறையில் 7 பெல்ட் இயந்திரங்களும், 4 டயர் இயந்திரங்களுமே மட்டும் உள்ளன. இது, விவசாயப் பணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. இதனால், பெரும்பாலான விவசாயிகள், தனியார் இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாக உள்ளது.

இந்நிலையில், தனியார் அறுவடை இயந்திரங்களின் வாடகை எவ்வித வரன்முறையும் இல்லாமல் தன்னிச்சையாக அதிகளவில் உயர்த்தப்பட்டிருப்பது வருத்தத்துக்குரியது. இதுதொடர்பாக வேளாண் துறையும், மாவட்ட நிர்வாகங்களும் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, தனியார் அறுவடை இயந்திரங்களின் வாடகையை முறைப்படுத்த வேண்டும்.

வேளாண் பொறியியல் துறை இயந்திரங்களின் வாடகையைவிட மணிக்கு ரூ. 100 அதிகம் என்றளவில், தனியார் நெல் அறுவடை இயந்திரங்களின் வாடகையை நிர்ணயித்து, உரிய அறிவுறுத்தல்களை வெளியிட வேண்டும்.

இனிவரும் காலங்களில், விவசாயிகள் தனியார் உதவியைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில், டெல்டா மாவட்டங்களின் விவசாயப் பணிகளுக்கான இயந்திரங்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், வேளாண் பொறியியல் துறையில் அதிக எண்ணிக்கையில் இயந்திரங்கள் அளிக்க வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தக் கோரிக்கை மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**"மீனவர்களை ஒன்றுகூடி பேசச் சொல்வது பலனளிக்காது**

தமிழக மீனவர்கள் பிரச்னையில் மீனவர்களை ஒன்றுகூடி பேசச் சொல்வது எந்த பலனையும் அளிக்காது என்று விழுப்புரம் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் நலச் சங்கம் தெரிவித்துள்ளது.

இச் சங்கக் கூட்டம் நகராட்சி பள்ளியில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் விஜயமூர்த்தி தலைமை தாங்கினார். இதில், இலங்கை ரோந்துப் படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதை தடுக்க ரோந்துக் கப்பல் படை முக்கிய பங்காற்ற வேண்டும். கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அடையாள அட்டையுடன் செல்ல வேண்டும். இந்திய ரோந்துப் படையும், இலங்கை ரோந்துப் படையும் தகவல்களை பரிமாறிக்கொள்ள வேண்டும். பாதை மாறிச் செல்லும் மீனவர்களை ரோந்துக் கப்பலிடம் ஒப்படைத்து உள்நாட்டு நீதிமன்றத்தில் வழக்குப் பதியலாம். இதையெல்லாம் செய்யாமல் எந்த அதிகாரமும் இல்லாத மீனவர்களை ஒன்றுகூடி பேசச் சொல்வது அர்த்தமற்றது. இது எந்த பலனையும் அளிக்காது.

இந்திய தேர்தல் ஆணையம் தனக்கென்று ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். அதில் முன்னாள் படைவீரர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகளை பணியமர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கால்நடை உயிரணுக்கள் இருப்பு மையம்: ரூ.36 லட்சம் செலவில் வீரபாண்டியில் அமைகிறது

திருப்பூர் : கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டல் செய்ய, "உயிரணுக்கள் இருப்பு மையம்', திருப்பூரில் 36 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.மாடுகள் இனவிருத்தி செய்ய, போதிய எண்ணிக்கையில் காளை மாடுகள் இல்லாததால், பல இனங்களில், இனப் பெருக்கம் பாதிக்கிறது. கலப்பின வகைகளை உருவாக்குவதில் தட்டுப்பாடு நிலவுகிறது. இதை தவிர்க்க, கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டல் செய்யப்படுகிறது.

இதற்காக, காளை மாடு பண்ணைகளில் இருந்து, உயிரணுக்கள் சேகரிக்கப்பட்டு, உயிர் அணுக்கள் சேமிப்பு மையத்தில் இருப்பு வைத்து, அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்கு, தேவையான அளவில் அனுப்பப்படுகிறது. அங்கு, கால்நடைகளுக்கு 10 ரூபாய் கட்டணத்தில், சினை ஊசி போடப்படுகிறது.மாடுகளில் உயிரணுக்களை சேமித்து வைக்கும், கால்நடை பெருக்கம் தீவன அபிவிருத்தி மையம், கோவையில் உள்ளது. இதுவரை, கோவையில் இருந்து செயற்கை கருவூட்டலுக்கான உயிரணுக்கள் பெறப்பட்டன. தற்போது, மாவட்ட தலைநகரான திருப்பூரிலேயே அம்மையம் அமைக்கப்படுகிறது.காளை பண்ணைகளில் இருந்து சேகரிக்கப்படும் உயிரணுக்கள் மொத்தமாக பெறப்பட்டு, "ஸ்ட்ரா' போன்ற குழாய்களில், "லிக்யூடு நைட்ரஜன் ஸ்டோரேஜ்' கண்டெய்னர்களில், பாதுகாப்பாக வைக்கப்படும்; 30 ஆண்டுகள் வரை, உயிரணுக்கள் வீரியம் குறையாமல் இருப்பில் இருக்கும். இம்மைய கட்டடம் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக 36 லட்சம் ரூபாய் நிதி

ஒதுக்கப்பட்டுள்ளது.திருப்பூர் வீரபாண்டி, தெற்கு ஆர்.டி.ஓ., அலுவலக வளாகத்தில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் அலுவலகம் உள்ளது. இவ்வளாகத்தில், கட்டடம் கட்டப்படுகிறது. இன்னும் மூன்று மாதங்களில் கட்டுமான பணி முடிவடையும்; வரும் ஏப்., மாதத்தில் செயல்பாட்டுக்கு வர வாய்ப்புள்ளது. திருப்பூர், தாராபுரம், உடுமலை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் விவசாயிகள் பயனடைவர்.

## கள்ளக்குறிச்சி பருத்தி வார சந்தையில் ஒரு கோடி மதிப்பில் பஞ்சு கொள்முதல்

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சியில் நடந்த பருத்தி வாரச் சந்தைகளில் ஒரு கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பில் பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி வார சந்தை நடந்தது. இதில் பல்வேறு பகுதிகளிலிருந்து 214 விவசாயிகள் 4,000 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். விழுப்புரம், கடலூார், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, தேனி உட்பட பல மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர்.

நேற்று முன்தினம் எல்.ஆர்.ஓ., பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.5,219க்கும், குறைந்த பட்சம் ரூ.4,150க்கும் விலை போனது. அதேபோல் சுவீன் பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.6,900க்கும், குறைந்தபட்சம் ரூ.6,400க்கும் விலை போனது.

விவசாயிகள் கொண்டு வந்த 284 பஞ்சு மூட்டைகளை 65 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்தனர். இந்த ஆண்டு விற்பனை இலக்காக 16 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பருத்தி வார சந்தை துவங்கி 4 வாரங்களில் ஒரு கோடியே 3 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

## சம்பா நெல் பயிர் அழியும் அபாயம்

மூங்கில்துறைப்பட்டு:மூங்கில்துறைப்பட்டு அடுத்த மணலூரில் நோய் பாதித்துள்ள சம்பா பயிர்களை காப்பாற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மணலூர் மற்றும் சுற்றியுள்ள பிரம்மகுண்டம், ராவுத்தநல்லூர், புதுப்பேட்டை கிராமங்களில் விவசாய நிலங்களில் சம்பா நெல் பயிரிட்டுள்ளனர். அவற்றில் சில விவசாய நிலங்களில் பயிர்கள் நோய் பாதித்துள்ளன. கடந்த ஆண்டு போதிய மழை இல்லாதால் விவசாயம் செய்ய முடியவில்லை. கடந்த மாதம் ஓரளவு பெய்த மழையால் விவசாயிகள் சம்பா நெல் பயிரிட்டனர். அந்த பயிரும் நோய் பாதித்துள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி கிராமங்களில் பயிர்களை நோயிலிருந்து காப்பாற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பண்ணை குட்டை அமைக்கும் பணி

சங்கராபுரம்:சங்கராபுரம் அடுத்த ஆரூர் ஊராட்சியில் ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்பில் பண்ணை குட்டை அமைக்கும் பணி நடந்து வருகிறது.
கிராமங்களில் மழை காலங்களில் மழை நீரை சேமிக்க தமிழக அரசு பண்ணை குட்டைகள் அமைக்க உத்தரவிட்டுள்ளது. சங்கராபுரம் ஒன்றியம் ஆரூர் கிராமத்தில் புதிதாக ரூ. ஒன்றரை லட்சம் மதிப்பில் பண்ணை குட்டை அமைக்கும் பணி நடந்து வருகிறது. ஊராட்சித் தலைவர் ரவி ஏற்பாட்டில் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

## பருத்தி ஏலம்: ரூ.1 கோடிக்கு வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஒரு கோடி ரூபாய்க்கு, பருத்தி விற்பனையானது.நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில், பருத்தி ஏலம், நேற்று நடந்தது.ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி,

திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 5,000 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.ஹெச்., சுரபி ரகம் அதிகபட்சமாக, 7,259, குறைந்த பட்சமாக, 6,710, ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 5,350, குறைந்தபட்சமாக, 4,869 ரூபாய்க்கும் ஏலம் போனது.பருத்தி தேவை அதிகரித்துள்ளதால், கடந்த வாரத்தைக் காட்டிலும், குவிண்டாலுக்கு, 200 ரூபாய் அதிகமாக ஏலம் போனது. அதனால், நேற்றைய ஏலத்தில், ஒரு கோடி ரூபாய்க்கு பருத்தி விற்பனையானது.விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்துச் சென்றனர்.

## பாமாயில் சாகுபடிக்கு மானியம்: வேளாண் அதிகாரி அழைப்பு

லாலாப்பேட்டை: "பாமாயில் பயிர் செய்தால் விவசாயிகள் மாதாந்திர வருவாய் ஈட்டலாம்' என, வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் கூறினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:கரூர் மாவட்டத்தில், 300 ஏக்கரில் பாமாயில் நடப்பட்டு வளர்ந்து வருகிறது. இந்த, 30 ஆண்டுகள் வரை மகசூல் கொடுக்கும் மாதாந்திர வருவாய் பெறலாம். மற்ற எண்ணெய் வித்துகளில் விதைகள் மூலம், நேரடியாக எண்ணெய் எடுக்கப்படுகிறது. மேலும் பாமாயில் விரிவாக்க மானியமாக, ஒரு ஹெக்டருக்கு, 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது.நடவு மானியமாக ஒரு ஹெக்டருக்கு, 6 ஆயிரம் ரூபாய், சொட்டுநீர் பாசனமாக இருந்தால், 10 ஆயிரமும் ரூபாயும், ஊடுபயிர் சாகுபடிக்கு, 5 ஆயிரமும் ரூபாய், உரநிர்வாகம் மற்றும் பயிர் பாதுகாப்பிற்காக, 5 ஆயிரம் ரூபாய், மண்புழு உரக்குழி தொட்டி கட்ட, 15 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

பால் விலை உயர்த்திய விவகாரம்பெரம்பலூர் கலெக்டர் விசாரணை

பெரம்பலூர்: பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று, பசும்பால் கொள்முதல் விலை லிட்டருக்கு, 20 ரூபாயிலிருந்து, 23 ரூபாயாகவும், எருமை பால் கொள்முதல் விலை லிட்டருக்கு, 28 ரூபாயிலிருந்து, 31 ரூபாயாக உயர்த்தியும், பால் விற்பனை விலையை உயர்த்தாமலும், தமிழக முதல்வர் கடந்த டிச., 23ம் தேதி உத்தரவிட்டார். இந்த உத்தரவு, 2014 ஜன., 1ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.ஆனால், முதல்வரின் உத்தரவை காற்றில் பறக்கவிடும் வகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் சொஸைட்டிகள் மூலம் விற்பனை செய்யப்படும் பசும்பாலின் விலை, கிராமப்புறங்களில் லிட்டர், 25 ரூபாயாகவும், பெரம்பலூர் நகரில், 26 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த திடீர் விலை உயர்வால், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்று காலை, 10.30 மணிக்கு, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் சொஸைட்டி செயலாளர்களை நேரில் வரவழைத்து, பாலின் விற்பனை விலையை உயர்த்தக்கூடாது என, முதல்வர் உத்தரவிட்டுள்ள நிலையில், மூன்று ரூபாய் விற்பனை விலை உயர்த்த யார் உத்தரவிட்டது என கேட்டுள்ளார்.

அதற்கு செயலாளர்கள், பாலின் விற்பனை விலை உயர்த்தினால் மட்டுமே, பணியாளர்களுக்கு சம்பளம் உள்ளிட்ட செலவுகளை சமாளிக்கவும், சொஸைட்டியை நடத்தவும் முடியும் என தெரிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து, சொஸைட்டியில் இதுகுறித்த தீர்மானம் போடப்பட்டுள்ளதா?, தீர்மானம் போட்டிருந்தால் அதன் நகலை தனக்கு கொடுக்குமாறு அவர்களை அனுப்பியதாக தெரிகிறது.

## மல்லிகைக்கு தேவை அதிகரிப்பு விளைச்சல் குறைவால் பாதிப்பு

திண்டுக்கல்,:மல்லிகை பூவிற்கான தேவை அதிகரித்திருந்தாலும், விளைச்சல் இல்லாததால் வருவாய் ஈட்ட முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் தனி கவனம் செலுத்தி வருகின்றனர். மார்கழியில் விளக்கு பூஜை அனைத்து கோயில்களிலும் நடைபெறும் என்பதால் அதை கணக்கிட்டு ஏராளமான விவசாயிகள் மல்லிகை சாகுபடி செய்திருந்தனர்.எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு பனி பொழிவு அதிகமாக இருந்ததால் பூ விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தேவை அதிகரித்திருந்தாலும், விளைச்சல் இல்லாததால் எதிர்பார்த்த வருவாயை ஈட்ட முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் மல்லிகை கிலோ ரூ. 800, கனகாம்பரம் ரூ. 400, காக்கரட்டா ரூ. 400, முல்லை ரூ. 700, பிச்சி ரூ. 500, சம்மங்கி ரூ. 70, செவ்வந்தி ரூ. 40, அரளி ரூ. 100, ரோஸ் ரூ. 80க்கு விற்பனையானது.

## நோய் தாக்கி கோழிகள் சாவுகேரளாவில் விற்பனை நிறுத்தம்

கூடலூர் :தமிழகத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட கோழிகள், மர்ம நோயால் இறந்ததைத் தொடர்ந்து, பீர்மேடு தாலுகாவில் நேற்று ஒரு நாள் கோழி விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழகப்பகுதியில் இருந்து காய்கறிகள், அடிமாடுகள், கோழி, பால் உள்ளிட்ட பல வகை உணவுப் பொருட்கள் தினந்தோறும் குமுளி வழியாக கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன், தேனி மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்கியதில் பல மாடுகள் இறந்தன. இதன் காரணமாக, தமிழகத்தில் இருந்து மாடுகள் கொண்டு வர இடுக்கி மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று தமிழகத்தில் இருந்து குமுளி வழியாக கேரளா குமுளி, வண்டிப்பெரியார் பகுதிகளுக்கு கொண்டு சென்ற கோழிகள் மர்ம நோய் தாக்கி திடீரென இறந்தன. இக்கோழிகளை குமுளி சுகாதார மேற்பார்வையாளர் ஜார்ஜ் குட்டி தலைமையில், சுகாதாரத் துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். மர்ம நோய் தாக்கியுள்ளதாகவும், இறந்த கோழிகளை ஆய்வகத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்த பின், இறப்பிற்கான காரணம் தெரியவரும், எனவும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், நேற்று ஒரு நாள் பீர்மேடு தாலுகாவில் உள்ள குமுளி, வண்டிப்பெரியார், குட்டிக்கானம், பீர்மேடு உள்ளிட்ட பகுதிகளில் கோழிகள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டது. இதன் காரணமாக, நேற்று தமிழகத்தில் இருந்து லாரிகள் மூலம் கொண்டு செல்லப்பட்ட கோழிகள் அனைத்தும், குமுளி செக்போஸ்ட்டில் தடுத்து, திருப்பி அனுப்பப்பட்டன.

## கரும்பின் கொள்முதல் விலையை மிஞ்சியது கரு வேலமர விறகு இதை நம்பி மனமாற்றம் வேண்டாம்

ஆர்.எஸ்.மங்கலம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவ மழை ஏமாற்றத்தால் நெல் விவசாயம் உட்பட மாற்று பயிர்களும் கருக துவங்கி உள்ளன. கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் கருவேல மரம் வெட்டும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை, நயினார்கோவில், பரமக்குடி, முதுகுளத்தூர் உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளில், அதிகளவில் கருவேல மரங்கள் வெட்டும் தொழிலில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் விறகுகள் ஒரு டன் ரூ.2750க்கு வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். திருப்பூர், கோவை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சாயபட்டறைகள், தொழிற்சாலைகளில், டன் 3,000 ரூபாய் வரை விற்கின்றனர்.

உடனடியாக விறகுகள் பணமாக மாறுவதாலும், எவ்வித பராமரிப்பும் இன்றி பலன் தரும் தொழிலாகவும் திகழ்வதால், விவசாயிகள் விவசாயத்தை கைவிட்டு கருவேல மரங்களை வெட்டி விற்பதில் அதிகளவில் ஈடுபட துவங்கியுள்ளனர். தமிழக அரசு கரும்புக்கான கொள்முதல் விலையாக, டன் ஒன்றுக்கு 2,650 ரூபாய் அறிவித்துள்ளது.

கரும்பு விவசாயிகள் கூறியதாவது: கரும்பு சாகுபடி செய்வதற்கு முன், நிலத்தை தயார் செய்து சாகுபடி செய்வது வரை பராமரிப்பு பணிக்காக ஏக்கருக்கு 20 ஆயிரத்திற்கும் அதிகமாக செலவாகிறது.
கருவேல மரங்களுக்கோ எவ்வித பராமரிப்பு செலவும் இல்லை.
ஏக்கருக்கு ஒரு லட்ச ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. பருவ மழையை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியது இல்லை, என்றனர்.
நிலத்தடி நீரை மொத்தமாக உறிஞ்சுவதோடு, மண்ணின் தன்மையையும் பல ஆண்டுகளுக்கு "ஒன்றுமில்லாமல்' செய்துவிடும் கருவேல மரங்களை அழிப்பது தான் எதிர்காலத்திற்கு நல்லது.

## சுருங்கியது! தென்னையில் சிலந்தி பூச்சி தாக்குதல் விளைச்சல் பாதிப்பு விவசாயிகள் கவலை

ராமநாதபுரம்:ராமநாதபுரம் அருகே தென்னையில் சிலந்தி பூச்சி தாக்குதல் அதிகரிப்பால், விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. நோயை கட்டுப்படுத்தும் வழி தெரியாமல், பெரும்பாலான விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
ரெகுநாதபுரம், தாமரைக்குளம், தெற்குகாட்டூர், வைரவன்கோயில், வீரவலசை, உச்சிப்புளி, நயினார்மரைக்கான், வண்ணாங்குண்டு, பெரியபட்டிணம், முத்துப்பேட்டை உள்ளிட்ட பல பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை விவசாயம் நடக்கிறது. இதை நம்பி, ஏராளமான விவசாயிகள் உள்ளனர்.
இங்கு விளையும் தேங்காய்கள் காங்கேயம், வெள்ளைக்கோயில், திருப்பூர் போன்ற வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. கடந்தாண்டைப்போல், நடப்பாண்டும் பருவமழை ஏமாற்றியதால், தண்ணீர் பற்றாக்குறையால் தென்னையில் சிலந்தி பூச்சி தாக்குதல் ஏற்பட்டுள்ளது. விளைச்சல் பாதியாக குறைந்து விட்டது.
ஏக்கருக்கு 2000 காய்கள் கிடைக்க வேண்டும். தற்போது 1000 தேங்காய்கள் மட்டுமே கிடைக்கிறது. இதனால், தோப்புகளை பராமரிக்க முடியாமல் பெரும்பாலான விவசாயிகள் அப்படியே விட்டு வைக்கும் பரிதாபத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.
வைரவன்கோவில் விவசாயி, முருகேசன்: இப்பகுதியில் தென்னை சாகுபடி

அதிகளவு நடந்து வருகிறது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தேங்காய் பறிப்பு நடக்கும். காய்ப்பு திறன் நன்றாக இருக்கும் பட்சத்தில், ஒரு மரத்திற்கு 30 தேங்காய்கள் கூட காய்க்கும். ஏக்கருக்கு 2,500 காய்கள் வரை பறிக்கலாம். பராமரிப்பு, தேங்காய் உறிப்பு கூலி, வாகனச் செலவு போக, 10 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். தற்போது, பூச்சி தாக்குதலால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பருமன் குறைவால், ரூ.5க்கு விற்க வேண்டிய தேங்காயை இரண்டரை ரூபாய்க்கு விற்கிறோம், என்றார்.

கீரிப்பூர்வலசை விவசாயி, சுப்பையா: கடந்த 20 ஆண்டுகளாக ஒன்றரை ஏக்கரில் தென்னை சாகுபடி செய்கிறேன். எப்போதும் இல்லாத அளவிற்கு, கடந்த 2 ஆண்டுகளாக விளைச்சல் பாதிக்க பட்டுள்ளது. பூச்சி தாக்குதலால் தேங்காய் சுருங்கியதால், குறைந்த விலைக்கு கேட்கின்றனர். பருமனுக்கு ஏற்றவாறு காய்களை கூடுதல் விலைக்கு விற்று வருகிறோம்.

தற்போது அனைத்து காய்களும் சுருங்கியதால், ஒரே விலையில் மொத்த வியாபாரிகளுக்கு கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம், என்றார்.

வேளாண் அறிவியல் நிலைய உழவியல் பேராசிரியர் துக்கையண்ணன்: தென்னையை பொருத்தவரை காண்டாமிருக வண்டு, தண்டு கூண் வண்டு, கருந்தலைப்புழு, கரையான் உள்ளிட்ட பூச்சிகளும், "எரியோபைட்' வகையை சேர்ந்த சிலந்தியும் அதிகம் தாக்கும்.

சிலந்தியை பொருத்தவரை தேங்காய் மட்டை காம்பின் அடிப்பகுதியில் தங்கி ஈரத்தையும், சத்துக்களையும் உறிஞ்சி விடும்.

தேங்காய் சுருங்கிவிடும். காற்றுக்கு தகுந்தவாறு, இந்த சிலந்தி நோய் பரவும். இந்நோயை கட்டுப்படுத்த மரத்திற்கு தலா 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு வைக்க வேண்டும். காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்த ஒரு கிலோ ஆமணக்கு புண்ணாக்குடன், 5 லிட்டர் தண்ணீருடன் கலந்து, மரத்தடியில் வைக்க வேண்டும், என்றார்.

## விவசாயம் பாதிப்பு: கருணை தொகை வழங்க வலியுறுத்தல்

திருவாடானை: ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் முத்துராமு: மாவட்டத்தில் இந்தாண்டு ஒரு லட்சத்து 20 ஆயிரம் எக்டேரில் நெல், மிளகாய், பயறு வகைகள் மற்றும் சிறுதானியங்கள் 50 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டது. சிறிய அளவு பெய்த மழையை நம்பி களை எடுப்பு, உரம் போன்றவற்றிற்கு, பல ஆயிரம் செலவழித்து விவசாயிகள் பெரும் நஷ்டத்தில் உள்ளனர். 482 பொதுப்பணித்துறை கண்மாய்களும், 1600 சிறுபாசன கண்மாய்களும், வறண்டுவிட்டன. கால்நடைகளுக்கு கூட தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தை, வறட்சி மாவட்டமாக அறிவித்து நெல் விவசாயத்திற்கு ஏக்கருக்கு 20 ஆயிரம், பிற பயிர் வகைகளுக்கு 5000 ரூபாய், கருணை

தொகை, வழங்க முதல்வர் ஜெ., நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோமாரி, ஆந்த்ராக்ஸ் நோய் பீதியால் 1.86 லட்சம் மாடுகளுக்கு இன்சூரன்ஸ்



கோவை: தமிழகத்தில் 15 மாவட்டத்தில் கோமாரி, ஆந்த்ராக்ஸ் நோய் பீதியால் 1.86 லட்சம் கறவை மாடுகள் இன்சூரன்ஸ் செய்யப்பட்டது. தமிழகத்தில் 1.11 கோடி மாடுகள், 20.56 லட்சம் எருமைகள் உள்ளன. தமிழக எல்லையோர பகுதியில் உள்ள கிராமங்களில் கோமாரி நோய் தாக்கம் அதிகமாக இருந்தது. குறிப்பாக மாநில வன எல்லையோர கிராமங்களில் கோமாரி நோய் தாக்கம் உச்ச கட்டத்தில் இருந்தது. கடந்த 3 மாதங்களில் மாநில அளவில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் கோமாரி நோயால் இறந்தன. இன்சூரன்ஸ் இல்லாததால் பெரும்பாலான மாடுகளுக்கு இழப்பீடு கிடைக்கவில்லை.

மாடுகளுக்கு ஆந்த்ராக்ஸ் என்ற வாய் சப்பை நோய் பாதிப்பும் இருக்கிறது. இந்த நோய் தாக்கம் தீவிரமாக இருந்தால் மாடுகள் உயிரிழந்து விடும். எனவே மாநில அளவில் நோய் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு இறப்பு ஏற்பட்டால் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் கால்நடை பராமரிப்பு துறை மூலமாக இன்சூரன்ஸ் திட்டம் நடைமுறையில் இருக்கிறது.

கறவை மாடு, எருமை வைத்திருப்போர் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேரலாம்.

பயனாளிகள் தங்கள் பங்களிப்பாக 50 சதவீத இன்சூரன்ஸ் கட்டணம் செலுத்தவேண்டும். கால்நடை பராமரிப்பு துறை 50 சதவீத இன்சூரன்ஸ் கட்டணம் செலுத்தும் என தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் வரை கோவை, கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், விழுப்புரம் மாவட்டத்தில் கறவை மாடுகள், எருமைகள் இன்சூரன்ஸ் செய்யப்பட்டு வந்தது.

இந்த 15 மாவட்டங்களில் 1.86 லட்சம் கறவை மாடுகள், கறவை எருமைகளுக்கு விரைவில் இன்சூரன்ஸ் செய்யப்பட்டது. இன்சூரன்சுக்காக கால்நடை வளர்ப்போர், கால்நடை பராமரிப்பு துறையினர் பல கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளனர். நடப்பாண்டில் சுமார் 3 லட்சம் மாடுகளுக்கு இன்சூரன்ஸ் செய்ய இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திற்கு 5 ஆயிரம் கறவை மாடு, எருமைகளுக்கு இன்சூரன்ஸ் செய்யப்பட்டது.

ஆனால் நடப்பாண்டில் மாவட்டம்தோறும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கறவை மாடு, எருமைகளுக்கு இன்சூரன்ஸ் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நாட்டு கறவை மாடுகள் இன்சூரன்ஸ் செய்யப்படுவதில்லை. கலப்பின மாடுகளான ஜெர்சி, பிரிசியன் போன்ற ரக மாடுகள் அதிகளவு இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. கலப்பின மாசுகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கிறது.

பால் அதிகம் தரும் இந்த கலப்பின மாடுகள், இதர நாட்டு மாடுகளை போல் நோய்களை சமாளிக்க முடியாமல் திணறுகின்றன. எனவே இந்த மாடுகள் அதிகளவு இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. மாடுகளின் சந்தை விலைக்கு ஏற்ப

இன்சூரன்ஸ் செய்யலாம். இன்சூரன்ஸ் செய்த மாடுகள் நோய் தாக்கியோ, இயற்கையாகவோ இறந்தால் டாக்டர் குழு பிரேத பரிசோதனை செய்து அறிக்கை தரும். அந்த அறிக்கை சான்று அடிப்படையில் இழப்பீடு பெறலாம் என கால்நடை பராமரிப்பு துறையினர் தெரிவித்தனர்.

**பால் விலை ரூ.3 உயர்வு : மக்கள் அதிர்ச்சி**



மன்னார்குடி: தமிழக அரசு பால் கொள்முதல் விலையை கடந்த வாரம் லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி அறிவித்தது. இந்த விலை உயர்வு 1ம் தேதி முதல் அமலுக்கு வந்தது. அதன்படி பசும்பால் லிட்டருக்கு ரூ.18 லிருந்து ரூ.21 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், விற்பனை விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார். ஆனால், அந்த அறிவிப்புக்கு மாறாக சில்லரை விற்பனையில் பொதுமக்களுக்கு விற்கப்படும் பாலின் விலையும் ரூ.3 உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு லிட்டர் பசும்பாலின் விலை ரூ.24 லிருந்து ரூ.27 ஆக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு கடந்த 1ம் தேதி முதலே அமல்படுத்தப்பட்டது. முன்னறிவிப்பு இல்லாமல் செய்யப்பட்டுள்ள இந்த பால் விலை உயர்வு பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமிழகம் முழுவதும் இந்த விலை உயர்வு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதுபற்றி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க திருவாரூர் மாவட்ட செயலாளர் ரத்தினம் கூறியது: ‘‘பால் உற்பத்தியாளர்கள் பசும்பால் லிட்டருக்கு ரூ.5ம் எருமைபால் லிட்டருக்கு ரூ.8ம் உயர்த்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் தமிழக அரசு கடந்த வார த்தில் பால் கொள்முதல் விலையை 3 ரூபாய் மட்டுமே உயர்த்தி அறிவித்துள்ளது. இந்த விலை உயர்வை ஈடுகட்ட நாங்கள் நுகர்வோரிடம் வசூலிக்கவேண்டும் என அரசிடம் கோரவில்லை. அதேநேரத்தில் அரசும் கொள்முதல் விலையை உயர்த்தியதால் விற்பனை விலையில் மாற்றம் இருக்காது என அறிவித்திருந்தது. இந்நிலையில் 1ம் தேதி முதல் விற்பனை விலையையும் மாற்றம் செய்து கூட்டுறவு சங்கங்கள் அறிவித்து நடவடிக்கை எடுத்துள்ளன.

இதற்கு முக்கிய காரணம், பால் கொள்முதல் உயர்வை ஈடுகட்ட முடியாமல் பல சங்கங்கள் நலிவடைந்த நிலையில் இருப்பதுதான். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலை உயர்வை அவர்களால் சமாளிக்க முடியாமல் பொதுமக்களின் மீது இந்த சுமையை ஏற்றியுள்ளனர்.

எனவே தமிழகம் முழுவதும் இயங்கிவரும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை பாதுகாக்க வும், அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதா ரத்தை பாதுகாக்க வும் தமிழக அரசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியம் வழங்க வேண்டும்''. இவ்வாறு அவர் கூறினார்.

### எக்ஸ்ட்ரா தகவல்

தமிழகத்தில் கடந்த 2001ல் ஆவின் நிறுவனத்தால் தினமும் 17.49 லட்சம் பால் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு அது 26.83 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது.

**வனத்துறை அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகை**



திருவில்லிபுத்தூர்: விளைநிலங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்யும் ஒற்றை யானை மற்றும் காட்டுப்பன்றிகள் பிரச்னைக்கு முடிவு கட்ட வலியுறுத்தி திருவில்லிபுத்தூரில் உள்ள வனத்துறை அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு தர்ணா போராட்டம் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருகே செண்பகத்தோப்பு வனப்பகுதியில் ஏராளமான யானைகள் உள்ளன. சமீபத்திய கணக்கெடுப்பில், இப்பகுதியில் அறுபதுக்கும் மேற்பட்ட யானைகள் இருப்பதாகத் தெரிந்தது. கடந்த 2 மாதத்திற்கு முன்பு யானைக் கூட்டத்தில் இருந்து ஒற்றை யானை பிரிந்து வந்து வயல்வெளிகளை சேதப்படுத்தி மாந்தோப்புகளை அழித்து நாசப்படுத்தியது. விவசாயிகளை ஓட, ஓட விரட்டியது. வனத்துறையினர் விரட்டியதால், இந்த யானை செண்பகத்தோப்பு, மம்சாபுரம் பகுதிகளில் விளைநிலங்களை சில நாட்களாக சேதப்படுத்தி வருகிறது. மேலும் காட்டுப்பன்றிகள் அட்டகாசமும் அதிகரித்துள்ளது. ஒற்றை யானை மற்றும் காட்டு பன்றிகள் அட்டகாசத்தை முடிவுக்கு கொண்டு வர வலியுறுத்தி ஐம்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் திருவில்லிபுத்தூர் வனத்துறை அலுவலகத்தை நேற்று காலை முற்றுகையிட்டனர். பிறகு தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்திலும் ஈடுபட்டனர். அவர்களிடம் மாவட்ட வன அதிகாரி அசோக்குமார் பேச்சுவார்த்தை நடத்தினார். யானையை விரட்டும் பணியைத் தீவிரப்படுத்துவது என்றும், காட்டுப்பன்றிகள் நடமாட்டத்தை

தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. இதனால் சமாதானம் அடைந்த விவசாயிகள் 2 மணிநேரம் நடத்திய போராட்டத்தை கைவிட்டனர்.

**இலங்கை அருகே காற்றழுத்த தாழ்வு நிலை : இன்று முதல் மழை தொடங்கும்**




சென்னை: தென் கிழக்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நேற்று மாலை வலுவடைந்தது. இதையடுத்து இன்று முதல் தமிழக கடலோரத்தில் பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வட கிழக்கு பருவ மழை காலம் டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த நிலையில் குளிர்கால மழை பெய்யும் சூழல் உருவாகியுள்ளது. இதை வெளிப்படுத்தும் வகையில் தென் கிழக்கு வங்கக் கடலில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அந்தமான் அருகே ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அது மெல்ல மெல்ல வலுப்பெற்று வட மேற்கு திசையில் நகர்ந்து வந்தது. நேற்று மாலை அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இலங்கைக்கு தென் கிழக்கு பகுதிக்கு நகர்ந்து வந்துள்ளது. இத மேலும் வட மேற்கு திசையில் நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து தென் தமிழக கடலோரத்தில் இன்று முதல் பரவலாக மழை பெய்யும். குறிப்பாக குமரிக் கடல் பகுதியில் கனமழை பெய்யும். அத்துடன் தமிழகத்தில் காலை நேரங்களில் பனிமூட்டம் காணப் படும். மலை பிரதேசங்களில் உறை பனி நிலவும்.

**சர்க்கரை உற்பத்தி 29% சரிவு**



புதுடெல்லி: நாட்டில் சர்க்கரை உற்பத்தி நடப்பு நிதியாண்டில் (2013-14) டிசம்பர் மாதத்துடன் முடிந்த சீசனில் மொத்தம் 57.39 லட்சம் டன்களாக உள்ளது. இது, கடந்த ஆண்டில் இதே காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டதைவிட (80.32 லட்சம் டன்கள்) 29 சதவீதம் குறைந்துள்ளது.

கரும்பு கொள்முதல் விலை பிரச்னையால் சர்க்கரை ஆலைகள் அரவைக்கான கரும்பை விவசாயிகளிடம் இருந்து பெறுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், கரும்பு அரவையும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் நாடு முழுவதும் 499 கரும்பாலைகள் அரவையில் ஈடுபட்டிருந்தன. ஆனால், இந்த ஆண்டில் அவற்றில் 476 கரும்பாலைகள்தான் இயங்குகின்றன. இதனால் சர்க்கரை உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது என்று இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது. 2013-14ல் மொத்த சர்க்கரை உற்பத்தி 250 லட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மூலச்சர்க்கரை உற்பத்தி 140 சதவீதம் அதிகரிப்பு**



ஜெயஸ்ரீ போஸ்லே    பூனா

இந்திய ஆலைகள் இரண்டு மாதங்களுக்கும் குறைவான காலத்தில் 1.95 லட்சம் டன் மூலச்சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன. கடந்த 2012–13 முழு பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) 81,000 டன் அளவிற்கே மூலச்சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது உற்பத்தி இப்போது 140 சதவீதம் அதிகரித்துள்ளது.

மூலச்சர்க்கரை உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனால் உற்பத்தி அதிகரித்துள்ளது. எனவே அரசு அளிக்க உள்ள சலுகைகளை எதிர்பார்த்து சர்க்கரை ஆலைகள் காத்திருக்கின்றன. மும்முர கரும்பு அரவைப் பருவத்தில் இன்னும் 90 நாட்களே மீதமுள்ளது. இப்போது அரசு சலுகைகளை அறிவித்தால் மீதமுள்ள காலத்தை சர்க்கரை ஆலைகள் நன்கு பயன்படுத்திக் கொள்ளும் என இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் (இஸ்மா) தெரிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தில் கரும்பு அரவைப் பணிகள் மந்தகதியில் தொடங்கின. எனினும் டிசம்பர் இறுதியில் அரவை மும்முரம் அடைந்தது. இஸ்மா வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி டிசம்பர் 31 நெருங்கும் சமயத்தில் 476 ஆலைகள் கரும்பு அரவை பணிகளை தொடங்கின. சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 23 ஆலைகள் குறைந்துள்ளது என்றாலும் சர்க்கரை உற்பத்தி மெதுவாக உத்வேகம் பெற்று வருகிறது.

டிசம்பர் 31 நிலவரப்படி நாட்டில் 57.39 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2012–ஆம் ஆண்டில் இதே நாளில் 80.32 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகியிருந்தது. ஆக, உற்பத்தி 29 சதவீதம் சரிவடைந்துள்ளது.

**பொங்கல் பண்டிகையையொட்டி கரும்பு வரத்து அதிகரிப்பு கோயம்பேட்டில் 1 கட்டு கரும்பு ரூ.150–க்கு விற்பனை**



தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை வரும் 14–ந்தேதி (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி தற்போதே சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு மதுரை, தேனி, சேத்தியாதோப்பு, பண்ருட்டி போன்ற இடங்களில் இருந்து கரும்பு வர தொடங்கிவிட்டது. இதுவரை 15 லாரி லோடு கரும்பு வந்துள்ளது. 7 அடி நீளமுள்ள ஒரு கட்டு கரும்பு(20 எண்ணிக்கை) ரூ.150 வரை விற்பனை செய்யப்படுகிறது. வரும் நாட்களில் விலை அதிகரிக்கலாம் எ

**தண்ணீர் வராததால் பெருமாள்கரட்டு கால்வாயை சீரமைக்கும் விவசாயிகள்**



ஆனைமலை, -

பெருமாள் கரட்டு கிளை கால்வாயில் தண்ணீர் வராததால் விவசாயிகள் கால்வாயை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள னர்.

<u>புதிய ஆயக்கட்டு பாசனம்</u>

ஆழியாறு அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளுக்கு கடந்த 2 மாதங்களாக தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. இதில் வேட்டைக் காரன்புதூர் பிரதான கால்வாயில் இருந்து பிரிந்து செல்லும் பெருமாள் கரட்டு கால்வாய் உள்ளது.

சுமார் 8 கி.மீ. நீளமுள்ள இந்த கால்வாய் கடந்த 15 ஆண்டுகளாக தூர்வாரப் படவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் கிளை கால் வாயின் இருகரைகளிலும் புதர் செடிகள் வளர்ந்து கால்வாய் தெரியாத அளவிற்கு உருமாறி உள்ளது.

<u>அவதி</u>

தொடர்ந்து பல ஆண்டுகளாக கால்வாயின் அடிப்பகுதியில் மண் சேரத் தொடங்கியது. இதனால் கால்வாயின் உயரம் பாதியாக குறைந்தது. மேலும் கால்வாயில் ஏற்பட்டுள்ள மண்மேடு காரணமாக வரும் தண்ணீர் கரை வழியே

ததும்பி வெளியேறி வந்தது. இதனால் கடைமடை பகுதி விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் பெரும் அவதிப்பட்டனர்.

இந்த நிலையில் பிரதான கால்வாயில் தண்ணீர் திறந்து 2 மாதகாலமாகியும் தங்களுக் குரிய தண்ணீர் கிடைக்காததி னால் பாதிக்கப்பட்டவிவசாயிகள் ஒருங்கிணைந்து தங்களது சொந்த செலவில் கிளை கால்வாயை தூர்வாரி சீரமைக்க முடிவு செய்தனர்.

<u>அகற்றும் பணி</u>

தற்போது முதல் கட்டமாக பெருமாள் கரட்டு கிளை கால்வாயின் இருகரைகளிலும் உள்ள புதர் செடிகள் மற்றும் மண் அகற்றும் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:-

கிளை கால்வாய் பராமரிப்பு பாசன சபைகளிடம் பொதுப் பணித்துறை ஒப்படைத்துள்ளது. ஆனால் அதனைத் தொடர்ந்து பராமரிக்க பாசன சபைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இதனால் கிளை கால்வாயில் மண் தேங்கி தண்ணீர் செல்லும் பாதையில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டு 2 மாதங்கள் ஆகியும் பெருமாள் கரட்டு கிளை கால்வாயில் தண்ணீர் வரவில்லை.

இதனால் கால்வாயில் உள்ள செடி, கொடிகள், மண்களை அகற்றி சீரமைக்க முடிவு செய்து, அதற்கான செலவை நாங்களே ஏற்று உள்ளோம். தொடர்ந்து கண் காணித்து கிளை கால்வாயை நல்ல முறையில் பராமரிக்க முடிவு செய்து உள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**விருத்தாசலம் அரசு தோட்டக்கலை பண்ணையில் 10 ஆயிரம் மாங்கன்றுகள் தயார் அதிகாரி தகவல்**



விருத்தாசலம் அரசு தோட்டக்கலை பண்ணையில் 10 ஆயிரம் மாங்கன்றுகள் தயார்நிலையில் உள்ளது என அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்.

10 ஆயிரம் கன்றுகள்

விருத்தாசலம் காட்டுக்கூடலூர் ரோட்டில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் நடப்பு ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு மாங்கன்றுகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

இதற்கென 10 ஆயிரம் மாங்கன்றுகள் வரையில் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, அல்போன்சா, பங்கனபல்லி, நீலம், பாலக்காடு போன்ற பல்வேறு ரக மாங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

தற்போது, உற்பத்தி செய்யப்பட்ட மாங்கன்றுகள் அனைத்தும் விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் தயார் நிலையில், வைக்கப்பட்டு பண்ணை பணியாளர்கள் பராமரிப்பு செய்து வருகின்றனர்.

ரூ.9,900 மானியம்

இது குறித்து தோட்டக்கலை அதிகாரி மணிமொழியிடம் கேட்ட போது, தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மாங்கன்றுகளை புதிய பரப்பில் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.9,900 வரையில் மானியம் வழங்கப் ப டும். மேலும், இதற்கு சுமார் 100 கன்றுகள் வரையில் தேவைப்படும்.

அதோடு இக்கன்றுகள் கடலூர் மாவட்டம் மட்டுமின்றி அருகில் உள்ள விழுப்புரம், அரியலூர், நாகை போன்ற மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளும் வாங்கி பயனடையலாம், விவசாயிகளுக்கு வழங்க மரங்கன்றுகள் தாயர் நிலையில் உள்ளது என்றார்.

**போடி மார்க்கெட்டில் ஏலக்காய் விற்பனை குறைந்தது**



போடி,

கடந்த 6 மாதங்களாக ஏலக்காய் விலை ஏற்ற, இறக்கமின்றி ஓரே சீராக உள்ளது. வடமாநிலங் களில் கடும் குளிர் நிலவு வதால் அங்கு ஏலக்காய் வியாபாரம் மிகவும் குறைந் துள்ளதாக வியாபாரிகள் கூறினர்.

ஏலக்காய் ஏலம்

தேனி மாவட்டம், போடி நாயக்கனூரில் உள்ள ஏலக் காய் விவசாயிகள் சங்க கட்டிடத் தில் ஏலக்காய் ஏலம் நடை பெறுகிறது. தனியார் நிறு வனங்கள் மற்றும்

விவ சாயிகள் சங்கம் ஏலக்காய் ஏலத்தை நடத்துகின்றன. ஏலக்காய் ஏலத்திற்கு விவசாயி களிடம் இருந்து அதிகளவில் ஏலக்காய்கள் விற்பனைக்கு பதிவு செய்யப்படு கின்றன.?ஏலக்காய் எடுப்பு சீசன் முடிவடைய இன்னும் ஒரு மாதம் உள்ள நிலையில் விற்பனைக்காக பதிவு செய்யப் படும் ஏலக்காய் சரக்குகள் அதிகளவில் வந்து கொண்டி ருக்கிறது. சராசரியாக ஒவ் வொரு ஏல மையத்திலும் 75 ஆயிரம் கிலோ முதல் 1 லட்சம் கிலோ வரை ஏலக்காய் பதிவு செய்யப்படுகிறது.

கடந்த 6 மாதங்களாக ஏலக்காய் விலை ஓரே சீராக ஒரு கிலோ ரூ.560 முதல் ரூ.580 வரை விற்பனை ஆகிறது. இந்த ஆண்டு ஏலத்தோட் டப் பகுதிகளில் தேவையான அளவு மழை பெய்துள்ளதால் ஒரு ஏக்கருக்கு 600 கிலோ வரை ஏலக்காய் நன்கு விளைச் சல் கண்டுள்ளது. ஆனால் விலை மட்டும் அதிகரிக்காமல் ஓரே சீராகவே கடந்த 6 மாதங் களாக இருந்து வருகின்றது.

வியாபாரிகள் கருத்து

இது குறித்து ஏலக்காய் வியாபாரிகள் கூறியதாவது:-

வெளிநாடுகளுக்கான ஏற்று மதி அதிகளவில் இல்லை. மேலும் வடமாநிலங்களில் கடும் குளிர் நிலவுவதால் அந்த பகுதிகளில் விற்பனை மிகவும் குறைந்துள்ளது. உள்ளூர்களில் தேவைப்பாடு மிகவும் குறைந் துள்ளதால் ஏலக்காய் வியா பாரம் மிகவும் குறைந்துள்ளது. இதனால் ஏலக்காய் விலை அதிகரிக்காமல் ஓரே சீராக உள்ளது.

இவ்வாறு வியாபாரிகள் தெரிவித்தனர்.

**தமிழகத்தில் இருந்து குமுளிக்கு விற்பனைக்கு வந்த 100 கறிக்கோழிகள் சாவு**



மயங்கி கிடந்த கோழிகளை சுகாதாரத்துறை அதிகாரிகள் சோதனை செய்த போது எடுத்த படம்.

குமுளி,

தமிழகத்தில் இருந்து குமுளிக்கு விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட 100 கறிக்கோழிகள் இறந்து கிடந்தன. இதைத் தொடர்ந்து பீர்மேடு தாலுகா பகுதியில் கோழிக் கறி விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

கறிக்கோழிகள்

தமிழகத்தில் இருந்து மாடுகளை இறைச்சிக்காக கேரளாவுக்கு கொண்டு வர கேரள அரசு தடைவிதித்துள்ளது. இந்நிலையில் மாட்டு இறைச்சியை சிலர் கொண்டு வருகிறார்கள். தடையை மீறி கொண்டு வரப்படும் மாட்டு இறைச்சியை சுகாதாரத்துறையினர் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

இந்நிலையில் கம்பம் பகுதியில் உள்ள ஒரு பண்ணையில் இருந்து பீர்மேடு தாலுகா பகுதிகளுக்கு நேற்று முன்தினம் இரவு கறிக்கோழிகள் மினி வேனில் கொண்டு வரப்பட்டது. இந்த கோழிகள் கடைகளுக்கு சப்ளை செய்யப்பட்டது. இதில் குமுளியில் உள்ள 4 கடைகளுக்கு சுமார் 600-க் கும் மேற்பட்ட கோழிகள் சப்ளை செய்யப்பட்டது.

100 கோழிகள் சாவு

நேற்று காலையில் ஒரு கடையில் இருந்த கோழிகளில் 100 கோழிகள் செத்து கிடந்தன. மீதம் உள்ள கோழிகள் மயங்கி கிடந்தன. இதை பார்த்த கடைக்காரர்கள் மற்றும் அப்பகுதியை சேர்ந்தவர்கள் தமிழக-கேரள எல்லைப்பகுதிக்கு சென்று அங்குள்ள சோதனை சாவடி வழியாக இறந்த கோழிகளை கொண்டு வருகிறார்கள். அதற்கு அனுமதிக்க கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இது பற்றிய தகவல் கிடைத்ததும் பீர்மேடு சுகாதாரத்துறை அதிகாரிகள் விரைந்து சென்று இறந்த கோழிகளை பறிமுதல் செய்து அழித்தனர். மேலும் மயக்க நிலையில் இருந்த கோழிகளை பரிசோதனைக்காக எடுத்து சென்றுள்ளனர். பறவைக்காய்ச்சல் தாக்குதலால் இந்த கோழிகள் இறந்ததா? என்று அதிகாரிகள் சோதனை செய்து வருகிறார்கள். இதைத்தொடர்ந்து பீர்மேடு பகுதியில் கறிக்கோழிகள் விற்பனை செய்ய சுகாதாரத்துறை அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பால் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்வு



கூட்டுறவு சங்க இயக்குநர்களின் எதிர்ப்பையும் மீறி திருச்சி மாவட்டம் மணப்பாறை பகுதியில் இயங்கி வரும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் பால் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தியுள்ளதால் பொதுமக்கள் மிகுந்த அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழக முதல்வர் அண்மையில் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டார். அதே சமயம் பால் சில்லறை விற்பனை விலையில் மாற்றமிருக்காது எனவும் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், ஜனவரி 1-ம் தேதி முதல் பால் விற்பனை விலையை மணப்பாறை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் திடீரென லிட்டருக்கு ரூ.3 உயர்த்தியுள்ளது.

இதுகுறித்து முறையான கூட்டம் கூட்டாமல் தீர்மானம் எதுவும் இல்லாமல் ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவிப்பாக பொதுமக்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கையில் அதிகாரிகள் அல்லது சங்கத் தலைவர், செயலர் ஆகியோரின் கையெழுத்து கூட இல்லை.

இதுகுறித்து அந்த சங்கத்தின் இயக்குநர்களில் ஒருவரான ராமனிடம் கேட்டதற்கு, “கடந்த டிசம்பர் 31-ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் சங்கச் செயலர், ’விலையை உயர்த்தவில்லை என்றால் ஆண்டுக்கு ரூ.95 லட்சம் நஷ்டம் ஏற்படும்’ என்றார். அப்படியொரு தீர்மானம் கொண்டுவரக் கூடாது என்று தெரிவித்தோம். தற்போது, விலையை உயர்த்தி அறிவிப்பு செய்துள்ளது அதிர்ச்சியாக இருக்கிறது” என்றார்.

இதுபற்றி கூட்டுறவு சங்கத் தலைவரான ஸ்டெல்லா மேரியிடம் கேட்டதற்கு, “நான் 2 நாட்களாக சொசைட்டிக்குப் போகவில்லை. விலையேற்றம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது” என்றார்.

இதேபோல், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி சங்கத்தில் பால் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தப் பட்டுள்ளது. இதுபற்றி பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் கூறுகையில், “தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களில் இந்த விலை உயர்வு செய்யப்படும். அரசு மானியம் இல்லாததால் இது தவிர்க்க இயலாதது” என்றனர்.

## திண்டுக்கல்: புத்தாண்டில் மல்லிகைப்பூ கிலோ ரூ.1000



திண்டுக்கலில் புத்தாண்டையொட்டி ஒரு முழம் மல்லிகைப்பூ ரூ.50-க்கு விற்பனையானது. பூக்கள் தட்டுப்பாட்டால் ஒரு கிலோ ரூ.1000-ஐ தொட்டதால், பெண்கள் புத்தாண்டுக்கு பூக்களை வாங்க முடியாமல் அதிர்ச்சியடைந்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளாக வடகிழக்கு, தென்மேற்குப் பருவமழைகள் பொய்த்தன. அதனால், காய்கறி, மலர் விவசாய சாகுபடிப் பணிகள்

முற்றிலும் பாதிக்கப்பட்டன. தற்போது லாரி தண்ணீரைவிட்டு, காய்கறி, மலர் செடிகளை விவசாயிகள் காப்பாற்றி வருகின்றனர். அதனால், காய்கறி, பூ மார்க்கெட்டில் பூக்கள்வரத்து குறைந்து அவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகின்றன.

புத்தாண்டையொட்டி புதன்கிழமை திண்டுக்கல், நிலக்கோட்டை பூ மார்க்கெட்டுகளில் பூக்களின் விலை பலமடங்கு அதிகரித்தது. நடைபாதை பூ வியாபாரிகள், ஒரு முழம் மல்லிகைப்பூவை அதிகபட்சமாக ரூ.50-க்கு விற்பனை செய்தனர். மார்க்கெட், நடைபாதை பூக்கடைகளில் முல்லை, மல்லிகைப்பூவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதால், பெண்கள் புத்தாண்டு தினத்தில் பூக்கள் வாங்க முடியாமல் சிரமம் அடைந்தனர்.

இதுகுறித்து நிலக்கோட்டை பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கத் தலைவர் தங்கராஜ் கூறியது:

நிலக்கோட்டை மார்க்கெட்டுக்கு புதன்கிழமை வெறும் 6 டன் மட்டுமே விற்பனைக்கு வந்தது. இந்தப் பூக்கள் சிறிது நேரத்தில் விற்றுத் தீர்ந்தன. மல்லிகைப்பூ அதிகபட்சம் கிலோ ரூ.800-க்கு விற்பனையானது. ஆனால், திண்டுக்கல் மார்க்கெட்டில் ரூ.1000-க்கு விற்பனையானது. கனகாம்பரம் ரூ.600, முல்லைப்பூ ரூ.500, பிச்சிப்பூ ரூ.450, கலர் பிச்சிப்பூ ரூ.400, சம்பங்கி ரூ.50, செவ்வந்தி ரூ.40, கோழிக்கொண்டை ரூ.40, செண்டுமல்லி ரூ.20, மரிக்கொழுந்து ரூ.120, மருகு ரூ.80, துளசி ரூ.40 ரோஜா, ரூ.70 என விற்பனையாயின. அடுத்த மாதம் மழை பெய்யாவிட்டால் பூக்கள ◌ெவரத்து மேலும் குறைந்து விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார்.